
### மருத்துவ சேவை வழங்குவதிலும் – மக்களின்

# உடல்நலனைக் காப்பதிலும் தமிழ்நாடுதான் 'நெம்பர் 1'

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



சென்னை, ஆக.25-

"நலம் காக்கும் ஸ்டாலின்" முகாம்கள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2.8.2025 அன்று சென்னை, சாந்தோம், செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார்.

இம்முகாமில் பங்குகொள்ளும் பயனாளர்களுக்கு பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், காது, மூக்கு மற்றும் தொண்டை மருத்துவம், மகப்பேறு மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், மன நல மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், நுரையீரல் மருத்துவம் ஆகிய மருத்துவச் சேவைகள் மற்றும் இந்திய மருத்துவம் சார்ந்த ஆலோசனைகள் சிறப்பு மருத்துவ நிபுணர்களை கொண்டு வழங்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பரிசோதனைகள் மட்டுமின்றி, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பதிவு செய்தல் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்கப்படுகிறது.

இது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

**ஆகஸ்ட் 2 தொடங்கி, சனிக்கிழமைதோறும் நடைபெற்று வரும் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்களில் இதுவரை 3 வாரங்கள் நிறைவுற்றுள்ளன.**

**முதல் வாரம் ( ஆகஸ்ட் 2) 44,795 மருத்துவப் பயனாளிகள்**

**இரண்டாம் வாரம் (ஆகஸ்ட் 9) 48,046 மருத்துவப் பயனாளிகள்,**

**மூன்றாம் வாரம் (ஆகஸ்ட் 23) 56,245 மருத்துவப் பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.**

**மருத்துவ சேவை வழங்குவதிலும் மக்களின் உடல்நலனைக் காப்பதிலும் தமிழ்நாடுதான் 'நம்பர் 1' என உறுதிசெய்வோம்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.8.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தி.மு.க. இளைஞரணி "தாய்பயணம்" பாகம் – 1 மற்றும் 2 ஆகிய இரண்டு புத்தகங்களை வெளியிட நக்கீரன் கோபால் அவர்கள் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வின்போது, கழகத் துணை பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக தலைமை நிலைய செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி எஸ்.முருகன், தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி. லெனின், நூலாசிரியர் ஈரோடு இறைவன், அண்ணா அறிவாலயம் மேலாளர் ஆர்.பத்மநாபன் ஆகியோர் உடனிருந்தனர்.




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.8.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளைச் சந்திக்கும் நிகழ்வில், திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முzன்தினம் (23.8.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், சுதந்திர போராட்ட வீரர் தியாகி இமானுவேல் சேகரன் அவர்களின் மகள் திருமதி பிரபாராணி மற்றும் குடும்பத்தினர், தேவேந்திரர் பண்பாட்டு கழகத்தின் தலைவர் பாலன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ளவுள்ள, தியாகி இமானுவேல் சேகனாரின் 68வது வீரவணக்க நாள் விழா அழைப்பிதழை வழங்கினார்கள். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இ. ராஜா, திருமதி தமிழரசி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.8.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற ஒன்றிய மாநில உறவுகள் குறித்த தேசிய கருத்தரங்கத்தில் கலந்து கொண்டு ஒன்றிய மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின் இணையதளத்தை தொடங்கி வைத்து, இந்தியாவில் உள்ள அனைவரும் கருத்துகளை பகிர்ந்துக் கொள்ளும் வகையில் இணையவழி வினாத்தாள் படிவத்தினையும் வெளியிட்டார். இக்கருத்தரங்கில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதியும், ஒன்றிய மாநில உறவுகள் குறித்த உயர்நிலை குழு தலைவருமான நீதியரசர் குரியன் ஜோசப், முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி ஜஸ்டிஸ் செலமேஸ்வர், முன்னாள் டெல்லி உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.பி. ஷா, கேரள மாநில முன்னாள் அமைச்சர் தாமஸ் ஐசக், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், உள்ளிட்ட அரசு செயலாளர்கள், ஒன்றிய மாநில உறவுகள் குறித்த உயர்நிலை குழு உறுப்பினர்கள் அசோக் வர்தன் ஷெட்டி, (ஓய்வு), டாக்டர் நாகநாதன், அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர்கள், அரசு வழக்கறிஞர்கள், சட்டத்துறை வல்லுநர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

## கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட

## முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



வத்தலக்குண்டு கிழக்கு ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



ஆண்டிமடம் மேற்கு ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.



செங்கம் மேற்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



அனக்காவூர் கிழக்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



பாலக்கோடு மத்திய ஒன்றியம்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



கன்னங்குறிச்சி பேரூர்,
சேலம் மத்திய மாவட்டம்.



மானாமதுரை நகரம்,
சிவகங்கை மாவட்டம்.



இராஜபாளையம் தெற்கு ஒன்றியம்,
விருதுநகர் தெற்கு மாவட்டம்.




களக்காடு வடக்கு ஒன்றியம்,
திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.